# <u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>

## O.S. No.234/2019

Deposition of **<u>P.W.3</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 03.04.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : வெங்கடேசன் Father's Name : கோவிந்தன்

துவக்க நேரம்: 01.01 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**<u>1, 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. வாதி சுசீலா அழைத்ததன் பேரில்தான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் ச.எண் தெரியாது, நீளம், அகலம் சுமாராக தெரியும், தாவா சொத்து 65 அடி நீளமும், 11 அடி அகலமும் கொண்டது. மேற்கண்ட விவரம் எனக்கு வாதி கூறிதான் தெரியும் என்றால் இல்லை, எங்களுடைய மூதாதையர் சொத்து என்பதால் எனக்கு நேரடியாக தெரியும்.

2. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் ஆரியபாளையம் கிராமத்தில் எனது தந்தை வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் குடியிருந்து வரும் வீட்டின் நீளம், அகலம் தெரியுமா என்றால் 32 அடி நீளமும், 42 அடி அகலமும் கொண்டது. நான் சொல்வதுபோல் தாவா சொத்தின் நீளம் 65 அடியும், அகலம் 11 அடியும் கொண்டது இல்லை என்றால்

சரியல்ல. தாவா சொத்தை வாதிக்கு கிரயம் செய்து கொடுத்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1, 2-ல் தாவா சொத்தின் நீளம், அகலம் 65 க்கு 11 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நான் நீண்ட நாட்களுக்கு முன்பு அந்த ஆவணத்தை பார்த்ததால் தற்பொழுது நினைவில்லை.

3. வா.சா.ஆ-1, 2-ல் தாவா சொத்தின் நீளம், அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆவணத்தில் இல்லை, ஆனால் அனுபவத்தில் புழக்கடையாக உள்ளது. அவ்வாறு மேற்படி இடம் வாதியின் அனுபவத்தில் உள்ளதற்கான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்குண்டான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் நத்தம் பட்டாவாக வழங்கும்பொழுது வெங்கடாஜலம் பெயரில் வழங்கப்பட்டுள்ளது, ஆனால் அதற்கு முன்பு கிரய பத்திரம் சுசீலா பெயரில் உள்ளது.

4. வா.சா.ஆ.3-ல் யார், யார் பெயர் இடம்பெற்றுள்ளது என்றால் மூக்கப்படையாட்சி மகன் மருதமுத்து படையாட்சி, சுப்ரமணியன் மனைவி சுசீலா, ராமசாமி மகன் வெங்கடாஜலம் ஆகியோர்களது பெயரில் உள்ளது. வா.சா.ஆ.3 கடந்த 27.03.1991-ல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் வாதி சுசீலாவிற்கு 3/5 என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

5. தாவா சொத்தில் 1-ஆம் பிரதிவாதி வெங்கடாஜலம் அவருக்குண்டான 1/3 பாகத்தில் கட்டிடம் கட்டுவதற்காக அடிக்கல் அமைத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் 1-ஆம் பிரதிவாதிக்கு 1/3 பாகம் பாத்தியப்பட்டது என்றாலும், அவரது பாகத்தை அவர் 4-ஆம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றாலும் சரிதான், ஆனால் நத்தம் பட்டாவை வைத்து 1-ஆம் பிரதிவாதி அவரது பாகத்தில் 1/3 என கிரயம் செய்து கொடுத்துவிட்டார்.

6. வாதிக்கு தாவா சொத்தில் 1/3 பாகம் மட்டுமே பாத்தியப்பட்டது என்றாலும், 3/5 பாகம் பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.234/2019, Dt.03.04.2025

**4-ஆம் பிரதிவாதி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**5-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. தாவா சொத்து ஆதியில் மூக்கப்படையாட்சி, ராமசாமி, கிருஷ்ணபடையாட்சி, பொன்னுசாமி படையாட்சி, அழகப்படையாட்சி ஆகிய 5 குடும்பங்களுக்கும் பொதுவில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்கண்ட 5 பேரும் சகோதரர்கள் என்றால் சரிதான். எனது தாத்தாவின் பெயர் கிருஷ்ண படையாட்சி என்றாலும், அவரது மகன் கோவிந்தன் எனது தந்தை என்றாலும் சரிதான்.

2. எனது தாத்தா கிருஷ்ணப்படையாட்சி, எனது பாட்டி தெய்வாணையம்மாள், எனது தந்தை கோவிந்தன் ஆகியோருக்கு தாவா சொத்தில் 1/5 பாகம் பூர்விகமாக உரிமை இருந்தது என்றாலும், அதன்பிறகு எனது பாட்டி தெய்வாணையம்மாள், பொன்னுசாமி படையாட்சி, அழகப்படையாட்சி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட பாகத்தையும் கிரயம் வாங்கிவிட்டார்கள் என்றால் சரிதான். எனது தாத்தா, பாட்டி, அப்பா மூவரும் அவர்களுக்கு சொந்தமான பாகத்தையும், கிரயம் பெற்ற பாகத்தையும் சேர்த்து 3/5 பாகத்தை வாதி சுசீலாவிற்கு கடந்த 1978-ல் கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். வாதி சுசீலா கிரயம் பெற்ற நாளிலிருந்து மேற்படி 3/5 பாகத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

3. மீதமுள்ள பாகமான 1/5 பாகத்தை 1-ஆம் பிரதிவாதி வெங்கடாஜலமும், மற்றொரு 1/5 பாகத்தை 5-ஆம் பிரதிவாதி மணியும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட 1/5 பாகத்தை விற்பனை செய்வதற்கு பதிலாக 1/3 பாகம் என்று தவறாக 4-ஆம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் நத்தம் பட்டாவை வைத்து அவ்வாறு கிரயம் செய்து

கொடுத்துவிட்டார்கள்.

4. நத்தம் பட்டாவில் பாகம் பற்றி குறிப்பிடமாட்டார்கள் என்றாலும், பாக உரிமையாளர்கள் பெயர்கள் மட்டும்தான் குறிப்பிடுவார்கள் என்றாலும் சரிதான். தாவா சொத்தில் 5-ஆம் பிரதிவாதி அவருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட பாகத்தை அனுபவத்து வருகிறார் என்றால் சரிதான். 4-ஆம் பிரதிவாதி 1/3 பாகம் என்று தவறாக குறிப்பிட்டு கிரயம் 1-ஆம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்று அதிகப்படியான இடத்தை ஆக்கிரமிப்பு செய்து அனுபவிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் கடக்கால் அமைப்பதற்கு முயற்சி செய்ததால்தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

5. ஆரம்ப காலத்தில் எப்படி அனுபவம் செய்த வந்தார்களோ அவ்வாறுதான் 5-ஆம் பிரதிவாதி அவரது பாகத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். வாதி கோரியவாறு பரிகாரமும் வழங்கவும், 5-ஆம் பிரதிவாதிக்கு 1/5 பாகமும், வாதிக்கு 3/5 பாகமும் பாத்தியப்பட்டது என்று தீர்ப்பும் வழங்கலாம் என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 01.35 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-D.Jansi Rani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.234/2019, Dt.03.04.2025